# Queensland இல் Kindy

## Kindy (மழலையர் பள்ளி)

Kindy (மழலையர் பள்ளி) எனவும் அழைக்கப்படும் Kindergarten ஆனது சிறார் பாடசாலை செல்வதற்கு முந்தய வருடத்திற்கானதொரு பகுதி நேர கல்வித்திட்டமாகும். இம் மழலையர் பள்ளிக்கு செல்வதன் மூலம், உங்களது பிள்ளை விளையாட்டினூடாக கல்விகற்கவும், நண்பர்களை உருவாக்கவும், பிரதான பள்ளி செல்வதற்கான மாற்றத்திற்கு தயாராகவும் முடியும்.

Queensland Government ஆல் அங்கீகரிக்கப்பட்ட Kindy திட்டங்கள் விளையாட்டை அடிப்படையாக கொண்டு, தகுதி வாய்ந்த குழந்தை பருவத்திற்குரிய ஆசிரியரால் நடாத்தப்படுகின்றன. Kindy திட்டங்களை, குழந்தை பருவ கல்வி மையங்களில்; சில கிராமப்புற பள்ளிகளில்; மற்றும் தொலைதூர கல்வி முறையின் மூலம் பெற்றுக்கொள்ளலாம். அல்லது, ஒரு மையத்திற்கு செல்ல முடியாத குழந்தைகள் eKindy மூலம் கற்றுக்கொள்ளலாம்.

## Kindy-யில் கற்றல்

Kindy-யில் பிள்ளைகள், விளையாட்டின் மூலம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவற்றை கற்றுக்கொள்கிறார்கள்:

- கருத்துக்களை மற்றும் உணர்வுகளை வெளிப்படுத்த மொழியைப் பயன்படுத்துதல்
- நண்பர்களை உருவாக்குவதோடு, அவர்களுடன் பங்கிட்டு விளையாடுதல்
- புதிய அனுபவங்களூடே கற்றுக்கொள்ளல்
- அதிக நம்பிக்கையுடன் வலுவான உணர்வையும் வளர்த்துக்கொள்ளல்
- சித்திரம், நடனம் மற்றும் நாடகம் மூலம் தங்களை வெளிப்படுத்துதல்
- அவர்களின் அறிவை மேம்படுத்துவதோடு, புதிய யோசனைகளை ஆராய்தல், மற்றும் பிரதான பள்ளியில் சிறந்ததொரு தொடக்கத்தை ஏற்படுத்த உதவுதல்

## எப்படி பள்ளியில் சேர்ப்பது?

குயின்ஸ்லாந்தில், சிறார்கள் பள்ளிக்கூடம் செல்வதற்கு முந்தய வருடத்தில் Kindy-யில் சேரலாம். ஒவ்வொரு சேவையும் வித்தியாசமானது. சிலர் காத்திருக்கும் பட்டியலில் இருக்கலாம். எனவே உங்கள் குழந்தையை சேர்ப்பதற்கான சிறந்த நேரம் பற்றி நீங்கள் தெரிவுசெய்த Kindergarten பள்ளி சேவையைத் தொடர்வு கொள்வது நன்று.

Kindy-யில் இணைவதற்கு, ஆனி 30 ஆம் தேதிக்கு முன்பு உங்கள் பிள்ளைக்கு 4 வயதாக இருக்க வேண்டும்.

| குழந்தையின் பிறப்பு | குழந்தை Kindy-யில் இணையக்கூடிய வருடம் |
|---|---|
| 1 ஆடி 2013-ல் இருந்து 30 ஆனி 2014 வரை | 2018 |
| 1 ஆடி 2014-ல் இருந்து 30 ஆனி 2015 வரை | 2019 |
| 1 ஆடி 2015-ல் இருந்து 30 ஆனி 2016 வரை | 2020 |
| 1 ஆடி 2016-ல் இருந்து 30 ஆனி 2017 வரை | 2021 |
| 1 ஆடி 2017-ல் இருந்து 30 ஆனி 2018 வரை | 2022 |
| 1 ஆடி 2018-ல் இருந்து 30 ஆனி 2019 வரை | 2023 |

உங்கள் குழந்தையை சேர்க்கும்போது தேவைப்படுபவை:

- உங்கள் குழந்தையின் பெயர் மற்றும் முகவரி
- அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஆகிய உங்கள் விபரங்கள்
- உங்களின் நீதிமன்ற உத்தரவு, பெற்றோருக்குரிய உத்தரவு அல்லது திட்டத்தின் விவரங்கள்
- சிறப்புத் தேவைகள் பற்றிய விவரங்கள் (உதாரணம்: இயலாமை, உணவு ஒவ்வாமை அல்லது பிற தேவைகளை)
- பிறந்த திகதிக்கான சான்று (உதாரணம்: பிறப்பு சான்றிதழ்)
- சுகாதார மற்றும் நோய்த்தடுப்பு நிலை
- உங்கள் பிள்ளையை அழைப்பதற்கு அனுமதிக்கப்பட்ட நபர்களின் விபரங்கள் மற்றும் அவசரநிலையில் தொடர்பு கொள்ள வேண்டிய நபரின் விபரங்கள்.

உங்கள் சேவை இந்த தகவலை ரகசியமாக வைத்திருக்கும். அதே வேளையில் உங்கள் குழந்தையின் பதிவுகளை அணுக உங்களுக்கு முழு உரிமை உண்டு.

Queensland Government

# Kindy திட்டம் ஒன்றை தேர்ந்தெடுத்தல்

குயின்ஸ்லாந்திலுள்ள அனைத்து குழந்தைகளும் பள்ளிக்கூடம் செல்வதற்கு முந்தய வருடத்தில் அங்கீகரிக்கப்பட்ட மழலையர் பள்ளியில் கலந்து கொள்ள தகுதியுடையவர்கள்.

ஒரு அங்கீகரிக்கப்பட்ட kindergarten திட்டமானது, அரசால் வகுக்கப்பட்ட நெறிமுறைகளுக்குட்படுவதோடு, கீழ்குறிப்பிட்டுள்ளனவாகவும் அமைகிறது:

- அரசாங்க வழிகாட்டுதல்களுக்கு இணங்க தகுதியான குழந்தை பருவ ஆசிரியர்களால் வழங்கப்படும் விளையாட்டு அடிப்படையிலான கற்றல் திட்டம்
- பள்ளிக்கூடம் செல்வதற்கு முந்தய வருடத்தில் நடாத்தப்படும் இந்த மழலையர் பள்ளியானது, பொதுவாக வாரத்திற்கு 15 மணிநேரமும், ஒரு வருடத்திட்கு 40 வாரங்களும் நடாத்தப்படும்
- Queensland Kindergarten Learning Guideline (குயின்ஸ்லாந்து மழலையர் கற்றல் வழிகாட்டல்) அல்லது பிற Queensland Curriculum and Assessment Authority (குயின்ஸ்லாந்து பாடத்திட்டம் மற்றும் மதிப்பீட்டு ஆணையம்) அங்கீகாரம் பெற்ற கற்றல் திட்டத்துடன் இணைக்கப்பட்டது.

Queensland Government ஆல் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தை அடையாளம் காண 'kindy tick' என்பதை நோக்கவும்.

# Kindy செலவுகள்

மழலையர் பள்ளி கட்டணங்கள், சேவையைப் பொறுத்து மாறுபடும். கட்டண கட்டமைப்பைப் பற்றிய விபரங்களைத் தெரிந்துகொள்ள உங்களுக்கு விருப்பமான Kindyயை தொடர்புகொள்ளுங்கள் .

குறைந்த விலைகொண்ட அல்லது இலவச kindergarten, தகுதியுள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படுகிறது. இதில் பின்வரும் தகுதிகளை பெற்றுள்ள வளர்ப்பு குடும்பங்களும் உட்படும்:

- தற்போதைய ஆஸ்திரேலிய அரசு Health Care Card (உடல்நல அட்டை - HCC) (அல்லது HCC பெற்றுள்ள குழந்தை)
- தற்போதைய Australian Government Pensioner Concession Card (ஓய்வூதியம் வழங்கல் அட்டை) (தானியங்கி HCC உரிமங்கள்) பெற்றுள்ளவர்
- Department of Veterans' Affairs Gold Card அல்லது White Card வைத்திருப்பவர்கள்
- HCC-ஐ வழங்குவதற்கான நோக்கத்துடன் தொடர்புடைய நிறுவனத்திலிருந்து ஒரு கடிதம் போன்ற முறையான தகவல்தொடர்பு
- டொரெஸ் ஸ்ரைட் தீவை சேர்ந்தவர்கள் அல்லது பழங்குடியினர் (அல்லது பழங்குடியினரை சேர்ந்த குழந்தையை வைத்திருப்பவர்கள்)
- ஒரே வயதிலுள்ள மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளை, ஒரே ஆண்டில் சேர்ப்பவர்கள்.

குறைந்த விலைகொண்ட அல்லது இலவச kindergarten மானியம் ஆனது உங்கள் சேவை வழங்குநருக்கு நேரடியாக வழங்கப்படும். இது உங்களுக்கு செலவுகளை குறைக்கும். நீங்கள் பல அடிப்படைகளை சந்தித்தாலும், ஒரே ஒரு முறை மட்டுமே இவ் உதவியை பெற முடியும்.

ஒரு நீண்ட நாள் பராமரிப்பு kindergarten திட்டத்தில் பங்குபெறும் குழந்தைகளின் குடும்பங்கள், Commonwealth Government Child Care Subsidy-யிற்கு (பொதுநலவாய அரசு குழந்தை பராமரிப்பு மானியத்திற்கு) தகுதியுடையவராக இருக்கலாம்.

இந்த பொதுநலவாய அரசாங்க உதவித் தொகையிற்கான தகுதி பற்றிய தகவல்களை Centrelink என்ற மையத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வளர்ப்பு அல்லது உறவினர் பராமரிப்பு உள்ள குழந்தைகள் கூடுதல் மானியங்களை அணுகலாம். மேலும் தகவலுக்கு உங்களின் kindy-யை மற்றும் Child Safety Service Centre-ஐ தொடர்பு கொள்ளவும்.

# மேலும் சில தகவல்கள்

Queensland Government-ஐ **13 74 68** என்ற தொலைபேசி எண்ணூடாக தொடர்பு கொள்ளவும்.

**www.qld.gov.au/earlyyearscount** என்ற இணையதளத்தில் 'kindy' என்று தேடவும்.

The Early Years Count என்ற முகவரியை Facebookல் தேடவும்.

ஆனி 2018 இல் தகவல் நடப்பிலுள்ளது.